**சுருக்கம்**

ஆட்சி எல்லை– திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் வட்டம் திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் (வ.நி 1 (1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.389** **நாள்: 21.10.2009**

**படிக்க:**

1. அரசாணை நிலை எண் 279 வருவாய்த்துறை நாள் 9.6.2003.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் கடித எண்.இ4/32309/2009, நாள் 25.6.2009 மற்றும் 15.7.2009.
3. முதன்மைச்செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண்.பணி6(4)/40769/2008, நாள் 1.9.2009.

***

**ஆணை:**

மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் அவர்கள் 30.6.2009 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வருவாய்த்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான தமது பதிலுரையில் கீழ்க்காணும் அறிவிப்பினை வழங்கினார்கள்:– "திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டத்தைச் சீரமைத்து திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைக்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்புக்கிணங்க திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைப்பது குறித்து முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கையினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையினை தளர்த்தி திருச்சிராப்பள்ளி மாவட்டம், தற்போதைய திருச்சிராப்பள்ளி வட்டத்திலிருந்து 30 வருவாய் கிராமங்களைப் பிரித்து திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவெறும்பூர் வட்டத்தை உருவாக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் திருவெறும்பூர் வட்டம் 22.10.2009 முதல் செயல்படும். சீரமைப்பிற்குப் பின் இந்த இரு வட்டங்களும் பின்வருமாறு அமையும்.

| வட்டம் | குறுவட்டம் |
|---|---|
| திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி வடக்கு<br>2. திருச்சிராப்பள்ளி தெற்கு |
| திருவெறும்பூர் | 1. வேங்கூர்<br>2. நவல்பட்டு<br>3. திருவெறும்பூர் |

3. இந்த ஆணையின் இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள அறிவிக்கை 21.10.2009–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்படும்.

4. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு இந்த ஆணையின் இணைப்பு 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு திருச்சிராப்பள்ளி வட்டத்திலிருந்து 26 பணியிடங்கள் மறுபணிபரவலமர்த்தல் **(Redeployment)** மூலமும், 12 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்தும் ஆகமொத்தம் 38 பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள், தற்பொழுதுள்ள அரசு ஆணைகளின்படி சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். மேலும் இணைப்பு 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு திருச்சிராப்பள்ளி வட்டத்திலிருந்து திருவெறும்பூர் வட்டத்திற்கு மறுபணிபரவலமர்த்துதல் மூலம் **(Redeployment)** மாற்றப்படும் பணியாளர்கள் உடனடியாக பணி ஏற்பர். தளவாடம் மற்றும் இதரப் பொருள்களை மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு இரண்டு ஈப்புகள் வழங்க தொடராச் செலவினமாக ரூ.10,22,000/– எரிபொருள் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.1,08,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

6. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு தளவாடங்கள் **(Furniture)** வாங்க தொடராச் செலவினமாக ரூ.2,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

7. புதிய திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தொலைபேசி அமைப்பதற்கு வைப்புத் தொகை **(Deposit)** ரூ.6,000/– ஆண்டொன்றுக்கு அதற்கு ஆகும் தொலைபேசி கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.2,125/– வீதம் ரூ.25,500/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

8. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் வரை மாத வாடகை ரூ.12,500/– வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.1,50,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

9. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு மூன்று கணினிகள் வாங்க ரூபாய் 75,000/– மூன்று கணினி பிரிண்டர் வாங்க ரூ.25,000/– ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.65,000/– பேக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.10,000/– தீயணைப்பு கருவி வாங்க ரூ.5,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

10. புதிய திருவெறும்பூர் வட்டத்திற்கு எதிர்பாரா செலவினமாக மிதிவண்டி, சுவர்க்கடிகாரம், பணப்பெட்டி வாங்க ரூ.10,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. மேலும், இப்புதிய வட்டத்திற்கு ஏனைய எழுதுபொருட்களுடன் ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரம், மின்சாரத்தால் இயங்கும் படிப்பெருக்கி இயந்திரம், எண் குறியீட்டு இயந்திரம், உலோக சீல் (முத்திரை) மற்றும் தேவையான படிவங்கள் அரசிதழ்கள் இலவசமாக வழங்க எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பிற்கு பற்று வைக்கப்படல் வேண்டும்:–

(அ) <u>பணியாளர் நியமனம்</u>

<u>(1) நில அளவைப் பணியிடங்கள்</u>

"2029 00 நில வருவாய் 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் 1 திட்டத்தில் சேராதது AE மத்திய நில அளவை அலுவலகம் 01 சம்பளங்கள்"
(து.தொ.கு. 2029 00 102 AE 0107)

(2) <u>குடிமைப் பொருள் பணியிடங்கள்:–</u>

"3456 00 குடிமைப்பொருள் 001 நெறிப்படுத்துதலும், நிர்வாகமும் 1 திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு 01 சம்பளங்கள்"
(து.தொ.கு. 3456 00 001 AB 01 08)

(3) <u>வருவாய் பணியிடங்கள்:–</u>

" 2053 00 – மாவட்ட நிருவாகம் –094 ஏனைய பணியாளரமைப்பு – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "
(து. தொ.கு. 2053 00 094 AB 0102)

(ஆ) <u>தொலைபேசி:– ரூ.31,500/–</u>

"05 அலுவலக செலவுகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) <u>சில்லரைச் செலவினம்/சுவர்க்கடிகாரம் முதலியன– ரூ.10,000/–</u>

"05 அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) <u>அறைகலன்கள்:– ரூ.2,00,000/–</u>

" 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன்"
(து. தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) <u>ஈப்பு:– ரூ.10,22,000/–</u>

" 21 மோட்டார் வண்டிகள்–01 வாங்குதல்"
(து. தொ. கு. 2053 00 094 AB 2119)

(ஊ) எரிபொருள் செலவினம்:– ரூ.1,08,000/–

" 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்"
(து.தொ.கு.2053 00 094 AB 4500)

**(எ) <u>கட்டிட வாடகை: ரூ.1,50,000/-</u>**

" 06 வாடகை கட்டண வீதங்கள், வரிகள் – 01 வாடகை"
(தா.தொ.கு. 2053 00 094 AB 0611)

**(ஏ) கணினி, படிப்பெருக்கி மற்றும் தொலை அச்சு வழங்குதல் – ரூ.1,00,000/-**

"76 கணினியும், துணைப்பாகங்களும் – 01 வாங்குதல்"
(தா.தொ.கு. 2053 00 094 AB 7614)

**(ஐ) இயந்திரமும் சாதனமும் – ரூ.80,000/-**

"19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்"
(த.தொ.கு. 2053 00 094 AB 1905)

**12.** மேற்கண்ட செலவினங்களை பெற்று வழங்குவதற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. வட்ட அலுவலகத்திலிருந்து பெறப்படும் பணப் பட்டியல்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் புது பணிகள் (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு-செலவு பொது-1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு-செலவு பொது-1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இவ்வாணையினை உடன் செயல்படுத்த தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**14.** இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.66118/நிதி(வருவாய்)/2009, நாள்.21.10.2009 மற்றும் 55681/சி.எம்.பி.சி/2009, நாள் 21.10.2009. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.936 (தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு) -இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.ச. பழனியப்பன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை -79 (21.10.2009-ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக).
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை–5.
மாவட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்டாட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பொது (தேர்தல்) துறை, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை –104
செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–35.

**நகல்:**
முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (வருவாய்/வ.செ.பொது–I/II/சி.எம்.பி.சி)துறை, சென்னை–9.
வருவாய்த்துறை, (அனைத்து பிரிவுகள்) சென்னை–9.
(தக்க தொடர் மேல் நடவடிக்கைக்காக)
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 1
## அரசு ஆணை (நிலை) எண் 389, நாள் 21.10.2009

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி வட்டத்தைப் பிரித்து 2009–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாளிலிருந்து திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருவெறும்பூர் வட்டமொன்று கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. தற்போது திருச்சிராப்பள்ளி வட்டம், திருச்சிராப்பள்ளி தெற்கு குறுவட்டத்திலுள்ள கீழக்குறிச்சி மற்றும் கீழகல்கண்டார்கோட்டை ஆகிய கிராமங்கள் பிரிவினைக்குப் பின் புதிய திருவெறும்பூர் வட்டம், வேங்கூர் குறுவட்டத்தில் இணைக்கப்படும்.

3. புதிய திருவெறும்பூர் வட்டத்தில் உள்ளடங்கும் 1. வேங்கூர், 2. நவல்பட்டு, 3. திருவெறும்பூர், ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது திருச்சிராப்பள்ளி வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி திருவெறும்பூர் வட்டாட்சியரால் 2009–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

| வ.எண் | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | வேங்கூர் | 1. பனையக்குறிச்சி<br>2. கீழமுல்லக்குடி<br>3. குவளக்குடி<br>4. பாப்பாக்குறிச்சி<br>5. வேங்கூர்<br>6. நடராஜபுரம்<br>7. அரசங்குடி<br>8. கிளியூர்<br>9. அகரம்<br>10. எல்லக்குடி<br>11. கீழக்குறிச்சி<br>12. கீழகல்கண்டார்கோட்டை |
| 2. | நவல்பட்டு | 1. குண்டூர்<br>2. சோழமாதேவி<br>3. நவல்பட்டு<br>4. கும்பக்குடி, வேலாயுதங்குடி<br>5. சூரியூர்<br>6. காந்தலூர்<br>7. எலந்தப்பட்டி |

| | | |
|---|---|---|
| | | 8. பூலாங்குடி<br>9. பழங்கனாங்குடி<br>10. தேனேரிப்பட்டி |
| 3. | திருவெறும்பூர் | 1. பத்தாளப்பேட்டை<br>2. கிருஷ்ணசமுத்திரம் (செம்மங்குளம் உட்பட)<br>3. கூத்தப்பார்<br>4. திருவெறும்பூர்<br>5. துவாக்குடி<br>6. வாளவந்தான்கோட்டை<br>7. திருநெடுங்குளம்<br>8. அசூர் |

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

**இணைப்பு – 2 அரசு ஆணை (நிலை) எண் 389, நாள் 21.10.2009**

**திருவெறும்பூர் வட்ட பணியிட விவரம்**
**அ– வருவாய் பிரிவு**

| வ. எண். | பணியிடம் பெயர் | திருச்சிராப் பள்ளி வட்டத் திலுள்ள பணியிடங் களின் எண்ணி க்கை | Std Pattern - இன் படி அனுமதிக்கப் பட வேண்டிய பணி யிடங்கள் | திருச்சிராப் பள்ளி வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | திருச்சிராப் பள்ளி வட்டத்திலி ருந்து திருவெறும்பூர் வட்டத்திற்கு மாற்றப்படும் பணியிடங்கள் | திரு வெறும்பூர் வட்டத்திற்கு புதிதாக தோற்று விக்கப்படும் பணியிடங் கள் | திரு வெறும்பூர் வட்ட மொத்த பணியிடங் கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 0 | 1 | 1 |
| 2. | வட்டாட்சியர் (வரவேற்பு) | 1 | – | 1 | – | – | – |
| 3. | தலைமை யிடத்து துணை வட்டாட்சியர் | 2 | 1 | 1 | 1 | – | 1 |
| 4. | மண்டல துணை வட்டாட்சியர் | 2 | 1 | 1 | 1 | – | 1 |
| 5. | வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | 5 | 3 | 2 | 3 | – | 3 |
| 6. | உதவியாளர் | 6 | 6 | 3 | 3 | 2 | 5 |
| 7. | இளநிலை உதவியாளர் | 3 | 4 | 2 | 1 | 2 | 3 |
| 8. | தட்டச்சர் | 2 | 1 | 1 | 1 | – | 1 |
| 9. | பதிவறை எழுத்தர் | 2 | 1 | 1 | 1 | – | 1 |
| 10 | ஈப்பு ஓட்டுநர் | – | – | – | – | 1 | 1 |
| 11. | ஈப்பு ஓட்டுநர் வரவேற்பு | 1 | 1 | 1 | – | – | – |
| 12 | அலுவலக உதவியாளர் கள் | 8 | 3 | 5 | 3 | – | 3 |
| 13. | இரவு காவலர் | 1 | 1 | 1 | – | – | – |
| 14. | மசால்ஜி | – | 1 | – | – | – | – |
| | மொத்தம் | 34 | 24 | 20 | 14 | 6 | 20 |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ –சமூக பாதுகாப்புத்திட்டம் (தற்காலிகம்) | | | | | | | |
| . | தனி வட்டாட்சியர் | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | உதவியாளர் | 2 | – | 1 | 1 | – | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 3 | – | 1 | 2 | – | 2 |
| 4. | ஈப்பு ஓட்டுநர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| | மொத்தம் | 7 | 1 | 4 | 3 | 2 | 5 |
| இ–தேர்தல் பிரிவு | | | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | 1 | – | 1 | – | – | – |
| 2. | உதவியாளர் (நிரந்தரம்) | 1 | – | 1 | – | – | – |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 | – | 1 | – | – | – |
| | மொத்தம் | 3 | – | 3 | – | – | – |
| ஈ. .வட்ட வழங்கல் பிரிவு (தற்காலிகம்) | | | | | | | |
| 1. | தனி வட்டாட்சியர் | 1 | – | 1 | – | – | – |
| 2. | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | உதவியாளர் | 1 | – | 1 | – | – | – |
| 4. | இளநிலை உதவியாளர் | 1 | – | 1 | – | – | – |
| 5. | வருவாய் ஆய்வர் (இளநிலை உதவியாளர் நிலை) | 4 | 1 | 2 | 2 | – | 2 |
| 6. | அலுவலக உதவியாளர் | 1 | – | 1 | – | – | – |
| | மொத்தம் | 9 | 2 | 7 | 2 | 1 | 3 |

<u>உ– நில அளவைப் பிரிவு (நிரந்தரம்)</u>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வட்ட தலைமை அலுவலர் | 1 | – | 1 | – | – | – |
| 2. | வட்டத்துணை ஆய்வாளர் | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | 1வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | நகர சாா ஆய்வாளர் | 2 | – | 2 | – | – | – |
| 5. | ஊராட்சி சார் ஆய்வாளர் | 1 | – | – | 1 | – | 1 |
| 6. | குறுவட்ட அளவர் | 3 | – | – | 3 | – | 3 |
| 7. | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 8. | வட்ட வரைவாளர் | 1 | 1 | 1 | – | – | – |
| 9. | புல உதவியாளர் | 5 | 1 | 2 | 3 | – | 3 |
| | மொத்தம் | 16 | 5 | 9 | 7 | 3 | 10 |
| | ஆக மொத்தம் (அ+ஆ+இ+ ஈ + உ) | **69** | **32** | **43** | **26** | **12** | **38** |

**நா.ச.பழனியப்பன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**